அனைவருக்கும்

# நலவாழ்வு

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை மாத இதழ்

April 2015 : Volume 1 Issue 4


www.tnhealth.org www.tn.gov.in



## ஏழைகள் நலன் காக்கும் ஈடு இணையற்ற திட்டம்





## முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம்



# அனைவருக்கும் நலவாழ்வு

## தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023

பேறு காலங்களில்
குழந்தைகளை ஈன்றெடுப்பதில்
அனைத்து பெண்களுக்கும் உரிய சமமான கண்ணியமிக்க,
சமூக நீதியுடன் கூடிய தாய் சேய் நல சுகாதார சேவைகள்
மற்றும் பேறுக்கு பிந்தை சேவைகளும்
எளிதில் கிடைக்கும் வண்ணம்
உயர்தர மருத்துவ வசதிகள் அமையப் பெற வேண்டுமென
தமிழ்நாடு அரசு உறுதிபூண்டுள்ளது.

# அனைவருக்கும் நலவாழ்வு


ஏழைகள் நலன் காக்கும் ஈடு இணையற்ற திட்டம் 02

A BOON FOR THE POOR 04

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 06

மருத்துவக் காப்பீட்டுக்கு விண்ணப்பிப்பது எப்படி ? 08

இந்திரதனுஷ் தடுப்பூசி திட்ட சிறப்பு முகாம் 23

வாய் நலமே உடல் நலம் 26

தாய் சேய் நல கண்காணிப்பு மையம் தொடக்கம் 30

| | | | |
|---|---|---|---|
| முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பெறும் மருத்துவ சிகிச்சைகள் | 10 | செய்தித்தாள்கள் பார்வையில் | 36 |
| சிறப்பு அறுவை சிகிச்சைகள் | 16 | 104 - Health Help Line | 40 |
| பயன்பெற்றோர் விபரம் | 17 | மனத்தக்காளி | 42 |
| மாநில நோயாளர் நல சங்கம் | 18 | இலவச மருத்துவ முகாம்கள் | 44 |
| Photo - Glimpses | 24 | பாதுகாப்பற்ற உணவுகளை தவிர்ப்போம் | 46 |
| Success Stories | 32 | குரல் மாற்றும் அறுவை சிகிச்சை | 48 |



Feedback and articles : nalavaazhvu@gmail.com



# ஏழைகள் நலன் காக்கும்
# ஈடு இணையற்ற திட்டம்



தமிழகத்தை இந்தியாவின் முன்னோடி மாநிலமாக திகழச் செய்யும் பொருட்டு, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விஷன் 2023, என்ற தொலைநோக்கு திட்டத்தை வகுத்துத் தந்தார்கள். அந்த தொலைநோக்குத் திட்டத்தின் வழிகாட்டுதல்படி தமிழகத்தில் செயல்படுத்தப்படும் சுகாதாரத் திட்டங்கள் நாட்டுக்கே முன்னுதாரணமாக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## பாராட்டு

குறிப்பாக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டம், மகளிர் சுகாதாரத்திட்டம் மற்றும் மருத்துவ கட்டமைப்பை சிறப்பாக மேம்படுத்துவது போன்ற தமிழக சுகாதார திட்டங்களை மத்திய அரசும், உலக சுகாதார அமைப்பும் மற்றும் பல சர்வதேச நிறுவனங்களும் பெரிதும் பாராட்டியுள்ளன.

## மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

தமிழக சுகாதாரத் துறையின் முன்னோடி திட்டங்களில் ஒன்றான முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த 2012–ம் ஆண்டு ஜனவரி மாதம் 11–ம் தேதி தொடங்கி வைக்கப்பட்டு முழு வீச்சில் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

## உலகத் தரமான சிகிச்சை

தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை எளிய மக்களும் தரம் வாய்ந்த சிகிச்சை பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளுக்கு தமிழகத்தின் தலைசிறந்த மருத்துவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்களைக் கொண்டு, அதிநவீன உபகரணங்கள் மற்றும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி உலகத் தரமான சிகிச்சை வழங்கப்படுகிறது.

## பயன்பெற்றோர்

139 அரசு மருத்துவமனைகள் உட்பட 819 மருத்துவமனைகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் மருத்துவ சிகிச்சைகள் சிறப்பாக வழங்கப்பட்டு வருகின்றது. இதுவரை 8 இலட்சத்துக்கு மேற்பட்டோர் பயன் பெற்றுள்ளனர்.

## அடையாள அட்டை

மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அடையாள அட்டைகள் ஒரு கோடியே 38 இலட்சம் நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அடையாள அட்டை இல்லாதவர்கள் கிராம நிர்வாக அலுவலர் சான்று மற்றும் குடும்ப அட்டையின் நகல் எடுத்து வந்தால் உடனே சிகிச்சை வழங்கப்படுவதோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் உடனடியாக மருத்துவக் காப்பீட்டு அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

## அரசு மருத்துவமனைகள் மேம்பாடு

முதலமைச்சரின் விரிவாக்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தால் அரசு மருத்துவமனைகளும் பயன்பெறுகின்றன. கடந்த 3 ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகளுக்கு ரூ.680 கோடி வருவாய் கிடைத்துள்ளது. இதன் மூலம் மருத்துவமனைகள் மேம்படுத்தப்பட்டு தேவையான நவீன கருவிகள் வாங்கப்படுகின்றன.

## அர்ப்பணிப்பு



டாக்டர் சி.விஜயபாஸ்கர்
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலில், மருத்துவத்துறையில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாக தமிழகம் பாராட்டுப் பெற்று வருகிறது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்னும் முதுமொழியின்படி, தமிழக மக்கள் அனைவரும் ஆரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ, தமிழக அரசு மக்கள் நல்வாழ்வுத் துறை முழு அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது.



# A BOON FOR THE POOR



**Dr J Radhakrishnan *IAS***
*Health Secretary, Tamilnadu*

Based on vital health indicators, Tamil Nadu is a frontrunner among the various States of India. Tamil Nadu has progressed steadily in the prevention and treatment of chronic diseases.

In order to achieve the objective of Universal health Care by providing affordable and quality health care to the People of Tamil Nadu, the Government has launched a unique Insurance Scheme, in the name of Chief Minister's Comprehensive Health Insurance Scheme.

This scheme will benefit families whose annual income is less than Rs.72,000/- by providing quality medical care for identified specialty services requiring hospitalization in nearby Government or private hospitals.

This scheme enables surgical, medical, diagnostic procedures, drugs, room rent for certain specified procedures on cashless basis through health insurance card or ration card.

## SUM INSURED

This scheme has provision to pay upto Rs.1,00,000/- per family per year for general routine cases. For 77 specific ailments this may extend upto Rs.1.5 lakhs. Hence coverage is being provided upto Rs.4 lakhs to each family in 4 years.

The new scheme covers 1016 procedures which include 23 important diagnostic procedures and 113 follow up procedures.

All the expenses related to the treatment - Transport expenses, Investigation charges, room rent etc - upto Rs.1000/- per year per patient is also included.

## BENEFICIARIES

1.36 crore families have been covered and smart cards have been distributed to them.

New enrollment is done through district Kiosk and smart cards have been distributed on the spot. At present about 744 Hospitals have been empanelled in this scheme of which, 154 hospitals are Government medical college hospitals and District Head quarters hospitals.

Diagnostic Procedures are being implemented as a unique feature in the entire country to assist the public to undergo Diagnostic cases alone.

## HIGH END PROCEDURES

For the benefit of the Public to cover High End Procedures, a scheme has been launched to cover (1) Liver transplantation (2) Renal transplantation (3) Bone Marrow transplantation (4) Cochlear implantation and (5) Stem cell transplantation to bear additional cost above the insurance coverage amounting to Rs.4 lakhs to 22 lakhs per case.

The flagship scheme indeed helps lakhs and lakhs of poor people get costly treatment free of cost.

# முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம்

தமிழகத்திலுள்ள 1.34 கோடி ஏழைக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 11.02.2012 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம், தமிழ்நாடு அரசின் ஒரு மிக முக்கியமான திட்டமாகும்.





## குறிக்கோள்



தமிழகத்தின் ஏழைக் குடும்பங்கள் சுகாதாரம், சிறந்த மருத்துவ சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை பெறுவதற்கென மருத்துவமனைகள் மூலமாக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கம், கட்டணமில்லாத மருத்துவ சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகளை, அரசு மற்றும் தகுதி வாய்ந்த தனியார் மருத்துவமனைகள் மூலம் செயல்படுத்துவதாகும்.

## தகுதியான திட்ட மதிப்பீடு

இந்த திட்டம் ஆண்டு வருமானம் ரூ. 72 ஆயிரத்துக்கும் குறைவாக உள்ள குடும்பங்களுக்கு பொருந்தும். கிராம நிர்வாக அலுவலரால் சான்றளிக்கப்பட்ட நபர், தமிழக முதலமைச்சரின்

விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியானவராவார்.

இந்த திட்டத்தின்படி ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆண்டிற்கு ரூ1 இலட்சம் வரை ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு சில சிகிச்சைகளுக்கு ரூ.1.5 இலட்சம் வரையிலும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தகுதியான நபர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள், சட்டபூர்வமான கணவன், மனைவிக்கு பிறந்த குழந்தைகள், தகுதியான நபர்கள் ஆவார்கள். தகுதியான நபரின் குழந்தைகளுக்கு வேலை கிடைக்கும் வரை அல்லது திருமணம் அல்லது 25 வயதை அடையும் வரை தகுதியுடையவராவார்.

தகுதியுடைய நபரை சார்ந்த பெற்றோர்க்கும் இது பொருந்தும்.

## தொலைநோக்கு திட்டம்

இந்த திட்டத்தில் மொத்தம் 1016 நோய் சிகிச்சைகளும், 23 நோய் பரிசோதனைகளும். அதனோடு தொடர்புடைய 113 தொடர் சிகிச்சைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்தில் வரைமுறைபடுத்தப்பட்ட சிகிச்சைகள் அனைத்தும், திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் பட்டியலிடப்பட்டுள்ள மருத்துவமனைகள் அனைத்திலும் அளிக்கப்பட்டுள்ளது.

தகுதிவாய்ந்த நபரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் இத்திட்ட காலம் முடியும் வரை தொகைக்கு உட்பட்டு எத்தனை முறை வேண்டுமானாலும், எந்த நிபந்தனையுமின்றி பயன்படுத்தக் கூடியதாகும். இதனை உபயோகப் படுத்தாவிடில் காப்பீட்டு தொகை அந்த ஆண்டே முடிவடைந்துவிடும்.

தற்போது, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகள் உட்பட 769 மருத்துவமனைகள் சிகிச்சை அளிக்க இத்திட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# மருத்துவக் காப்பீட்டுக்கு விண்ணப்பிப்பது எப்படி ?



மருத்துவச் செலவு என்பது திடீரென வரக் கூடியது. பொருளாதார வசதி இல்லாத ஏழைகளின் மருத்துவ செலவை அரசே செலுத்தும் வகையில் கொண்டு வரப்பட்டது முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம். இத்திட்டத்தின் பயனைப் பெற விண்ணப்பிப்பது எப்படி ? அதற்கான தகுதிகள் என்ன ? ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

### முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என்பது என்ன ?

நமக்கு ஏற்படும் சில மருத்துவ உதவிகளுக்குத் தேவையான பணத்தை அரசே செலுத்துவது தான் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.

### முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் பெற தகுதி என்ன ?

இத்திட்டத்தின் பயனைப் பெற ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் 72,000 ரூபாய்க்குக் கீழே இருக்க வேண்டும்.

### முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் பெற தேவையான ஆவணங்கள் எவை ?

கிராமப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனில் கிராம நிர்வாக அலுவலரிடமும், நகர்ப்புறத்தைச் சேர்ந்தவர்கள் எனில் தாசில்தாரிடமும் வருமானச் சான்றிதழ் வாங்கிக் கொடுக்க வேண்டும். குடும்ப அட்டை இருக்க வேண்டும். குடும்ப அட்டையில் பெயர் உள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் பயனைப் பெற முடியும்.

### முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் பயனை எப்படி பெறுவது ?

இத்திட்டத்தின் மூலம் அரசு மற்றும் பதிவு பெற்ற தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பயன்பெற முடியும். இதன் மூலம் கீழ்க்கண்ட சிகிச்சைகளைப் பெற முடியும். இதயம் மற்றும் இதய



நெஞ்சக அறுவை சிகிச்சை, புற்றுநோய் மருத்துவம், சிறுநீரக நோய்கள், மூளை மற்றும் நரம்பு மண்டலம், கண் நோய் சிகிச்சை, இரைப்பை மற்றும் குடல் நோய்கள், ஒட்டுறுப்பு (பிளாஸ்டிக்) அறுவை சிகிச்சைகள், காது, மூக்கு மற்றும் தொண்டை நோய்கள், கருப்பை நோய்கள், ரத்த நோய்கள்.

## மருத்துவமனை செல்லும்போது கவனிக்க வேண்டியவை எவை ?

இலவச சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் முன் அந்த மருத்துவமனையில் காப்பீட்டுத் திட்ட அலுவலரைச் சந்தித்து மேலும் விரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் ஒரே சிகிச்சைக்கு வெவ்வேறு மருத்துவமனைகளில் வெவ்வேறு கட்டணங்கள் பெறப்படுவதுண்டு.

## இத்திட்டம் குறித்த விபரங்களை எப்படி தெரிந்துகொள்வது ?

**https://www.cmchistn.com** என்ற இணைய தளத்தில் இத்திட்டம் குறித்த விபரங்களை தெரிந்துகொள்ளலாம்

## மேலும் விபரங்கள் அறிய 24 மணி நேரமும் இயங்கும் கட்டணமில்லாத தொலைபேசி எண்

# 1800 425 3993

மேலதிக விவரங்களுக்கு இத்திட்டத்தில் பதிவு செய்து கொள்வதற்கும், மேற்கொண்டு விவரங்களைப் பெறவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பெறும்

# மருத்துவ சிகிச்சைகள்

## இதயம் & நெஞ்சக அறுவை சிகிச்சை

- மாரடைப்பு அறுவை சிகிச்சை
- இதய வாதநோய் அறுவை சிகிச்சை
- இதய துடிப்பு செயல் இழத்தல்
- இதயம் அதிகப்படியாக துடிப்பது சரி செய்யும் அறுவை சிகிச்சை
- இதயத்தை சுற்றியுள்ள பைகளுக்கான சிகிச்சை
- இதய இரத்த குழாய் அடைப்பு பைபாஸ் அறுவை சிகிச்சை
- இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை
- பிறவி இதயநோய்கள் அறுவை சிகிச்சை
- அஞ்சியோ பிளாஸ்டி மற்றும் ஸ்டெண்ட் பொருத்துதல்
- பலூான் வால்வுலோ பிளாஸ்டி
- இரத்த குழாயில் இரத்தகட்டி அடைப்பு நீக்கும் அறுவை சிகிச்சை
- தற்காலிக மற்றும் நிரந்தர பேஸ்மேக்கர் பொருத்துதல்
- இரத்தக் குழாய் வீக்கம் நீக்கும் அறுவை சிகிச்சை
- அடைபட்ட இதய இரத்த குழாய்களில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும் EECP சிகிச்சை
- அஞ்சியோ பிளாஸ்டி
- மூளைக்குச் செல்லும் இரத்த குழாய் அடைப்பு

## புற்றுநோய் மருத்துவம்

- புற்றுநோய் கட்டிகளுக்கான அறுவை சிகிச்சை
- புற்றுநோய்களுக்கான கதிர்வீச்சு சிகிச்சை
- புற்றுநோய்களுக்கான மருத்துவ சிகிச்சை
- புற்றுநோய்களுக்கான கிரையோ தெரபி சிகிச்சை

## முடநீக்கி அறுவை சிகிச்சைகள்

- எலும்பு முறிவு மற்றும் மூட்டு விலகல் அறுவை சிகிச்சை
- எலும்பு மூட்டு உள் அக நோக்கி (ஆர்தராஸ் கோப்பி) சரி செய்தல்
- மூட்டு, தசை, நாண் நோய்கள்
- கை, கால், விரல் மற்றும் பாதம் அகற்றும் அறுவை சிகிச்சை
- மாற்று எலும்பு பொருத்துதல்
- தண்டுவடத்தில் உயிர்காக்கும் அறுவை சிகிச்சை
- இடுப்பு மூட்டு மாற்று, முழங்கால் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை

## கண்நோய் சிகிச்சை

- கருவிழி மாற்று அறுவை சிகிச்சை
- கண்நீர் அழுத்த நோய்க்கான அறுவை சிகிச்சை
- விழித்திரை நோய்களுக்கான அறுவை சிகிச்சை
- லீனியர் ஆக்ஸிலரேட்டர் சிகிச்சை (மேக்குலர் டிஜெனரேசன்)
- விட்ரெக்டமி அறுவை சிகிச்சை
- விழித்திரை விலகல் அறுவை சிகிச்சை
- மாறுகண் அறுவை சிகிச்சை
- கண் இரப்பை (மூடுதல்) நீக்கும் அறுவை சிகிச்சை
- குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சை (ரேடினோபதி ப்ரீ மெச்சூரிடி)

## காது, மூக்கு, தொண்டை

- ✔ காது கேட்கும் கருவி பொருத்தும் அறுவை சிகிச்சை
- ✔ செவித்திறன் தெரபி
- ✔ மேஸ்டாய்டு எலும்பு அகற்றுதல்
- ✔ மேல் எலும்பை அகற்றுதல்
- ✔ ஸ்டேபிஸ் எலும்பை அகற்றுதல்
- ✔ தொண்டை அறுவை சிகிச்சை
- ✔ முக சீரமைப்பு அறுவை சிகிச்சை
- ✔ சைனஸ் நோய்க்கான என்டோஸ்கோபி
- ✔ மூக்கு தண்டு நேர் செய்யும் சிகிச்சை

## கர்ப்பப்பை நோய்கள்

- ✔ கர்ப்பப்பை கிழித்தலுக்கான அறுவை சிகிச்சை
- ✔ கர்ப்ப காலத்தில் உண்டாகும் உயர் இரத்த அழுத்தம்
- ✔ கர்ப்பகால அதிகமான இரத்த போக்கு
- ✔ கர்ப்பப்பை அடி இறக்கம் சரி செய்தல் அறுவை சிகிச்சை
- ✔ கர்ப்பப்பை கட்டி நீக்குதல்
- ✔ கர்ப்பப்பை, சினைப்பையில் ஏற்படும் புற்றுநோயை அகற்றுதல்

## நுரையீரல்

- ✔ நுரையீரல் மூச்சுக் குழாய் அடைப்பு சரி செய்தல்
- ✔ நுரையீரல் கீழ் அகற்றுதல், இணைப்பை சரி செய்தல்
- ✔ நுரையீரல் கற்றுயுள்ள பை வளைய அறுவை சிகிச்சை
- ✔ நுரையீரல் இரத்த குழாய் அடைப்பு அறுவை சிகிச்சை

## சிறுநீரக நோய்கள்

- ✔ சிறுநீரக அறுவை சிகிச்சை
- ✔ சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை
- ✔ சிறுநீரக கல் சிகிச்சை மூலம் சரி செய்தல்
- ✔ சிறுநீர் குழாய் சரி செய்தல்
- ✔ புரோஸ்டேட் சுரப்பி அறுவை சிகிச்சை
- ✔ மூத்திர காய் வீக்கம்
- ✔ டயாலிசிஸ் இரத்த சுத்திகரிப்பு

## மூளை மற்றும் நரம்பு மண்டலம்

- ✔ தீராத வலிப்பு நோய் அறுவை சிகிச்சை
- ✔ மூளை மற்றும் தண்டுவடத்தின் உயிர்காக்கும் அவசர அறுவை சிகிச்சை
- ✔ முதுகு தண்டுவடம் விலகுதல் தொடர்பான அறுவை சிகிச்சை
- ✔ பக்கவாதம் மூளை செயல் இழப்பு சரி செய்தல்
- ✔ மூளை, இரத்த புற்று, டிபி சரி செய்தல்
- ✔ மூளையில் இரத்த நீரை அகற்றுதல்
- ✔ மூளையில் இரத்த குழாயில் ஏற்படும் பக்கவாதத்திற்கான அறுவை சிகிச்சை
- ✔ பிறவி குறைபாடுகள் மற்றும் தலை நீர் வீக்கம் அறுவை சிகிச்சை
- ✔ குல்லியன் பாரிவாதநோய்(GBS) சிகிச்சை
- ✔ மூளை மற்றும் தண்டுவட நோய்கள், கபாலத்தின் அடித்தள உள் நோய்கள் அறுவை சிகிச்சை (ADEM)
- ✔ கோமா மற்றும் மூளைக் காய்ச்சலுக்கான சிகிச்சை
- ✔ நரம்பு மண்டல பாதிப்பை சரி செய்வது, மூளை பாதிப்பு அகற்றுவது
- ✔ நரம்பியல் அறுவை சிகிச்சை

## இரத்த குறைபாடு

- ✔ இரத்தம் உறைதல் தொடர்பான அறுவை சிகிச்சை
- ✔ இரத்தப் போக்கு தொடர்பான அறுவை சிகிச்சை
- ✔ விஷ ஜந்துக்கள் கடிகளுக்கான மருந்து சிகிச்சை
- ✔ தாலிசீமியா மற்றும் சிக்கிள் செல் இரத்த சோகை

## தொற்று நோய்

- கக்குவான் இருமல், டிப்திரியா
- டெங்கு காய்ச்சல், மலேரியா

## அவசர சிகிச்சை

- ஆஸ்த்துமா
- மூச்சு திணறல்
- அதிகப்படியான நுரையீரல் சளி
- செப்டிக் படர்வது தொற்றுநோய்
- விஷவாயு சுவாதித்து மூச்சு திணறல்

## தோல் வியாதி

- இரத்த வழி பரவும் தோல் நோய்
- உடலுறுப்புகளை செயல் இழக்கச் செய்யும் பாக்டீரியா

## ரெமடோலஜி

- கை மற்றும் நரம்பில் ஏற்படும் வாதம்
- எலும்பு மஜ்ஜை குறைபாடு

## ஹார்மோன்

- இரத்த அழுத்தம் ஏற்பட்டு நினைவிழப்பது (கோமா)
- உணவு குழாய் அடைப்பு
- அட்ரோ தெரபி

## இரத்த குழாய்களுக்கான அறுவை சிகிச்சை

- கை, கால், விரல் பாதம் அகற்றும் அறுவை சிகிச்சை

## ஒட்டுறுப்பு (பிளாஸ்டிக்) அறுவை சிகிச்சை

- தீக்காயம் மற்றும் அதன்பின் விளைவுகளுக்கான சிகிச்சை
- உதட்டு பிளவு மற்றும் மேல் அன்னப் பிளவு சீர்படுத்தும் சிகிச்சை
- தோல் மாற்று அறுவை சிகிச்சை
- முகச் சீரமைப்பு
- உடல் இயக்கத்தை மட்டுப்படுத்தும் சுருக்கங்களை சீர்படுத்துதல்

## பொதுவான அறுவை சிகிச்சை

- தைராய்டு சுரப்பி அறுவை சிகிச்சை
- குடல் இறக்கம் சம்பந்தமான அனைத்து அறுவை சிகிச்சை
- குடல் புண்நோய் நோய்
- அதிகப்படியான நீர் சுரப்பிகள்
- சிஸ்டிக் ஹைக்ரோமோ அறுவை சிகிச்சை
- உதிரப்போக்கு & அல்சர் அறுவை சிகிச்சை

## உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை

- மாற்று சிறுநீரம் அறுவை சிகிச்சை
- மாற்று இருதய அறுவை சிகிச்சை
- ஸ்டெம்செல் மாற்று அறுவை சிகிச்சை
- கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை

## குழந்தைகளுக்கான பொதுவான சிகிச்சை

- ✓ குறைபாடுடன் பிறந்த குழந்தை
- ✓ பச்சிளம் குழந்தைகளின் பாதுகாப்பு
- ✓ புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தை

## இரைப்பை மற்றும் குடல் நோய்கள்

- ✓ பித்தப்பை, கல்லீரல் மற்றும் கணையம் அறுவை சிகிச்சை
- ✓ ஆசிட்டினால் குடல் பாதிப்புக்கான அறுவை சிகிச்சை
- ✓ உணவு பாதையில் அரிப்பினால் ஏற்படும் சுருக்கங்களுக்கான அறுவை சிகிச்சை
- ✓ லேப்ராஸ்கோப்பி கருவி மூலம் பித்தப்பை அகற்றுதல்
- ✓ உணவு மற்றும் இரத்தக் குழாயில் ஏற்படும் பிளவுகளுக்கான அறுவை சிகிச்சை
- ✓ மண்ணீரல் பாதிப்பு சிகிச்சை

## பிறக்கும் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை

- ✓ குறை பிரசவத்தில் பிறந்த குழந்தை மூச்சு திணறலால் ஏற்படும் பாதிப்பு
- ✓ நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சிகிச்சை
- ✓ பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சிகிச்சை
- ✓ சிறுநீரகம் பழுதடைந்த குழந்தைகளுக்கான சிகிச்சை மாற்று சிறுநீரகம் பொருத்துதல்

## குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சை

- ✓ ரேடியாலஜி அறுவை சிகிச்சை
- ✓ இதயம் மாற்றும் இதய நோய் சம்பந்தமான அறுவை சிகிச்சை

## குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை

- ✓ பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை
- ✓ குழந்தைகளின் தீவிர சிகிச்சை
- ✓ புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான அறுவை சிணிச்சை
- ✓ (ECMO) சிகிச்சை
- ✓ சிறுநீரக தொற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான சிகிச்சைகள்

## அரசு மருத்துவமனைகளுக்கென

# அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவ சிகிச்சை முறைகள்

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் பயனாளிகளுக்கு மருத்துவ சிகிச்சை செலவு அனைத்தையும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைகள் உட்பட 769 மருத்துவமனைகள் சிகிச்சை அளிக்க இத்திட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கீழே அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள 64 வகையான சிகிச்சை முறைகள் பிரத்யேகமாக அரசு மருத்துவமனைகளில் மட்டும் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

| அரசு மருத்துவமனைகளுக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவ சிகிச்சை முறைகள் |
|---|
| நீண்ட எலும்பு முறிவு அறுவை சிகிச்சை |
| தொடை எலும்பின் தண்டு/ கழுத்து முறிவு |
| நீண்ட எலும்பு தண்டு முறிவு (மேற்கை, முன்கை மற்றும் முன்கால்) |
| முழங்காலுக்கு மேல்/ கீழ் கால் துண்டிப்பு |
| முழங்கை மேல்/ கீழ் கை துண்டிப்பு |
| முன்பாதம் துண்டிப்பு |
| கணுக்கால் துண்டிப்பு |
| கால் விரல்கள் துண்டிப்பு |
| கை விரல்கள் துண்டிப்பு |
| கணுக்காலுக்கு கீழ் துண்டிப்பு |
| மென்மையான திசு காயம் |
| எலும்பு ஒட்டுதல் (மட்டும்) |
| கை, கால் விரல்களை சரி செய்தல் |
| கூட்டு எலும்பு முறிவை சரி செய்தல் |
| எலும்பு இடப்பெயர்தலை சரி செய்தல் |
| தொடை எலும்பின் தலை அழிவு |
| மென்மை திசு புனரமைப்பு |
| காயத்திற்கான சிகிச்சை (முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை) |
| காயத்திற்கான சிகிச்சை (மூன்றாம் நிலை) |
| முழங்காலிலுள்ள வட்ட எலும்பு அறுவை சிகிச்சை (தனி அறுவை சிகிச்சையாக அல்லாமல் ஏனைய காயங்களுக்கான சிகிச்சைகளுடன்) |
| சிறு எலும்பு முறிவு சிகிச்சை (தனி அறுவை சிகிச்சையாக அல்லாமல் ஏனைய காயங்களுக்கான சிகிச்சைகளுடன்) |
| மேஸ்டாய்டு அறுவை சிகிச்சை |
| காது எலும்பு அறுவை சிகிச்சை |
| காது சவ்வு அறுவை சிகிச்சை |
| முகப்பகுதி இயக்க மூளை நரம்பு அழுத்த நீக்கம் |
| குரல் வளை அறுவை சிகிச்சை |
| அடினாய்டு அறுவை சிகிச்சை மற்றும் காது குழாய் பொருத்துதல் |
| மூக்கிலுள்ள இரத்த கட்டியை அகற்றுதல் |
| எண்டோஸ்கோப்பி மூலம் கண்ணீர் பாதையை சரி செய்யும் சிகிச்சை |
| எண்டோஸ்கோப்பி மூலம் சைனஸ் சரி செய்தல் |
| கர்ப்பப்பை விரிசல் மற்றும் கருப்பை குழாய் நீக்க சிகிச்சை |
| கர்ப்பகால வலிப்பு நோய் சிகிச்சை |
| கூட்டு எலும்பு முறிவை சரி செய்தல் |
| எலும்பு இடப்பெயர்தலை சரி செய்தல் |
| தொடை எலும்பின் தலை அழிவு |

| |
|---|
| மென்மை திசு புனரமைப்பு |
| காயத்திற்கான சிகிச்சை (முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை) |
| காயத்திற்கான சிகிச்சை (மூன்றாம் நிலை) |
| முழங்காலிலுள்ள வட்ட எலும்பு அறுவை சிகிச்சை (தனி அறுவை சிகிச்சையாக அல்லாமல் ஏனைய காயங்களுக்கான சிகிச்சைகளுடன்) |
| சிறு எலும்பு முறிவு சிகிச்சை (தனி அறுவை சிகிச்சையாக அல்லாமல் ஏனைய காயங்களுக்கான சிகிச்சைகளுடன்) |
| மேஸ்டாய்டு அறுவை சிகிச்சை |
| காது எலும்பு அறுவை சிகிச்சை |
| காது சவ்வு அறுவை சிகிச்சை |
| முகப்பகுதி இயக்க மூளை நரம்பு அழுத்த நீக்கம் |
| யோனி மூலம் கருப்பை நீக்குதல் மற்றும் இடுப்பு தசைகள் சரி செய்தல் |
| சிஸ்டோஸில், ரெக்டோஸில் |
| தீங்கற்ற கர்ப்பப்பை கட்டியை யோனி மூலம் நீக்குதல் |
| வயிற்று பகுதி மூலமாக கர்ப்பப்பை நீக்குதல் |
| ஹிஸ்ரோ லேப்ராஸ்கோப்பி மூலமாக நோயைக் கண்டறிதல் |
| செவுள் நீர்க்கட்டி அகற்றுதல் (பிரான்சியல் சிஸ்ட்ரி மூவல்) |
| கழுத்து நீர்க்கட்டி அகற்றுதல் |
| சப்மேண்டிபுலார் உமிழ்நீர் சுரப்பி நீக்குதல் |
| ஐதரோகிலாசல் நீர்க்கட்டி நீக்குதல் |
| தைராய்டு கட்டி அகற்றுதல் (ஹெமி) |
| தைராய்டு அகற்றுதல் (இஸ்த்துமஸ்) |
| தைராய்டு அகற்றுதல் ( பார்சியல்) |
| ரிசக்சன் மற்றும் எனியூக்ளியேசன் |
| தைராய்டு அகற்றுதல் ( சப்டோட்டல்) |
| முழு தைராய்டு அகற்றுதல் |
| எளிய மார்பக அறுவை சிகிச்சை |
| மாற்றியமைக்கப்பட்ட மார்பக அறுவை சிகிச்சை |

| |
|---|
| மேல் இரைப்பை இறக்க அறுவை சிகிச்சை |
| மேல் இரைப்பை இறக்க அறுவை சிகிச்சை + வலை பொருத்துதல் |
| தொப்புள் இறக்க அறுவை சிகிச்சை |
| தொப்புள் இறக்க அறுவை சிகிச்சை + வலை பொருத்துல் |
| கீழ்புற தழும்பு இறக்க அறுவை சிகிச்சை |
| கீழ்புற தழும்பு இறக்க அறுவை சிகிச்சை + வலை பொருத்துதல் |
| லேப்ராஸ்கோப்பிக் குடல்வால் அறுவை சிகிச்சை |
| இரைப்பை அகற்றுதல் அறுவை சிகிச்சை |
| சிறுகுடல் வெட்டி ஒட்டுதல் |
| பெருங்குடல் அகற்றுதல் |
| பெருங்குடல் துவாரம் மூடுதல் |
| பெருங்குடல் துவாரம் மூடுதல் |
| பெருங்குடல் துவாரம் மூடுதல் |
| கிரைக்கோபேரிங்க்ஸ் மற்றும் உணவு குழாயிலுள்ள அயல் பொருள் அகற்றுதல் |





# சிறப்பு அறுவை சிகிச்சைகள்

ஏழை எளிய மக்களுக்கு உதவிடும் வகையிலும், குறிப்பாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, காது நுண் எலும்பு கருவி பொருத்தும் சிகிச்சை, ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை போன்ற சிறப்பு அறுவை சிகிச்சைகள் செய்து கொள்ளும் ஏழைகளுக்கு உதவிடும் வகையில் ரூ.1.50 லட்சத்திற்கும் மேலாக ஏற்படும் கூடுதல் செலவினத்தை அரசே ஏற்கும் வகையில் ரூ.10 கோடியில் மூலதன நிதி ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த மூலதன நிதியை பெருக்கும் வகையில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் அரசு மருத்துவமனைகளில் பெறப்படும் தொகையில் 15 விழுக்காடு இந்த நிதிக்கு காப்பீடு நிறுவனத்தால் செலுத்தப்படுகிறது.

சிறப்பு அறுவை சிகிச்சைகளுக்கு தகுதியுள்ள காப்பீட்டுத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கும் கூடுதலாக தேவைப்படும் செலவினம், மூலதன நிதியிலிருந்து செலவிடப்பட்டு வருகிறது.

சிறப்பு அறுவை சிகிச்சைகளுக்கு தகுதியுள்ள காப்பீட்டுத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கும் கூடுதலாக தேவைப்படும் செலவினம், மூலதன நிதியிலிருந்து செலவிடப்பட்டு வருகிறது.

சிறப்பு அறுவை சிகிச்சை செய்யும் ஒரு பயனாளி தனிப்பட்ட முறையில் எவ்வித செலவும் செய்ய வேண்டிய அவசியமின்றி, சிறப்பு அறுவை ரூ.1.50 இலட்சம் வரையில் காப்பீடு நிறுவனத்தின் மூலமாகவும், அதற்குமேல் ஏற்படும் கூடுதல் செலவுத் தொகை முழுவதும் மூலதன நிதியிலிருந்தும் வழங்கப்படுகிறது. அவ்வாறான இனங்கள் வல்லுநர் குழுவால் தீர்மானிக்கப்படுகிறது.

# பயன்பெற்றோர் விபரம்

## முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பயன் அடைந்தவர்கள் மற்றும் அதற்கான மதிப்பீடு தொகை விபரம் 31.12.2014 வரை

| வ.எண் | விபரம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | பயன் அடைந்தவர்களின் எண்ணிக்கை | 8,85,789 |
| | அதற்கான மதிப்பீடு தொகை | ரூ.18,70,03,77,012 |
| 2 | அரசு மருத்துவமனைகளில் பயன் அடைந்தவர்களின் எண்ணிக்கை | 3,52,002 |
| | அதற்கான மதிப்பீடு தொகை | ரூ.6,70,67,10,302 |

| வ.எண் | விபரம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | நோய் கண்டறியும் பரிசோதனை மூலமாக பயனடைந்தவர்களின் எண்ணிக்கை | 1,27,358 |
| | அதற்கான மதிப்பீடு தொகை ரூபாய் | ரூ.23,59,67,312 |

## உயர்சிறப்பு சிகிச்சையில் பயனடைந்தவர்கள்

| வ. எண் | சிகிச்சை | பயன் பெற்றோர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1. | 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான காது நரம்பு உள்வைப்பு அறுவை சிகிச்சை | 1088 | ரூ.16,10,61,100 |
| 2. | சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை | 643 | ரூ.8,95,14,300 |
| 3. | எலும்பு மஜ்ஜை அறுவை சிகிச்சை | 29 | ரூ.40,99,000 |
| 4. | ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை | 47 | ரூ.66,32,000 |
| 5. | கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை | 14 | ரூ. 21,00,000 |

# மாநில நோயாளர் நல உதவி சங்கம்



முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தைத் தவிர, தற்போது தமிழ்நாடு மாநில நோயாளர் நல உதவி சங்கம் நடைமுறையில் உள்ளது. இச்சங்கத்தின் செயல்பாடுகள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளரின் தலைமையின் கீழ், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் உறுப்பினர்–செயலாளராக உள்ள செயற்குழுவால் நிருவகிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு, அறுவை சிகிச்சையின் தன்மைக்கு ஏற்ப ரூ.5,000 முதல் 25,000 வரை நிதியுதவி வழங்கப்படுகிறது.

இந்த திட்டத்தில் தகுதியான நபர்களுக்கு நிதியுதவி உடனடியாக வழங்கும் பொருட்டு, நிதி ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# காப்பீட்டு அட்டை பெற

குடும்ப அட்டை நகலுடன் இணைத்து கிராம நிர்வாக அலுவலரின் வருவாய் சான்றினை பெற்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள காப்பீட்டு திட்ட அலுவலகத்தில் உடனடியாக அடையாள அட்டை பெற்று கொள்ளலாம்.

## காப்பீட்டு அட்டை






## முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்

# சிறப்பு அம்சங்கள்

| சேர்க்கப்பட்ட வசதிகள் | முந்தைய காப்பீட்டுத் திட்டம் | தற்போதைய காப்பீட்டுத் திட்டம் |
|---|---|---|
| உறுதி செய்யப்பட்ட காப்பீட்டுத் தொகை | மொத்த காப்பீட்டு தொகை ரூ.1 இலட்சம் (4 வருடங்கள்) | • மொத்த காப்பீட்டு தொகை ரூ.4 இலட்சம் (4 வருடங்கள்).<br>• வருடந்தோறும் ரூ.1 இலட்சம். சில முறைகளுக்கு ரூ.1.5 இலட்சம் |
| சிகிச்சை முறைகளின் எண்ணிக்கை | 642 சிகிச்சை முறைகள் | • இத்திட்டத்தின் கீழ் 1016 வகையான சிகிச்சை முறைகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.<br>• இதில் 23 முக்கிய பரிசோதனைகளும் 113 தொடர் சிகிச்சை முறைகளும் அடங்கும். |
| பரிசோதனை மையங்கள் | வியாதிகளைக் கண்டறியும் பரிசோதனைக் கட்டணம் அறுவை சிகிச்சை செய்யப்பட்டால் மட்டுமே அளிக்கப்பட்டது | • அரசு மருத்துவமனை மற்றும் முகாம்களில் 23 பரிசோதனைகளுக்கு கட்டணம் செலுத்த தேவையில்லை. |
| தொடர் கவனிப்புச் சிகிச்சை | ஏதும் இல்லை | • சிகிச்சை முடிந்து 5 நாட்களுக்கு தொடர் கவனிப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. |
| போக்குவரத்து வசதி | ஏதும் இல்லை | • ஒரு குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு ரூபாய் ஆயிரம் வரை வழங்கப்படுகிறது. |
| திட்டத்தில் உறுப்பினர் சேர்க்கை | கிராமந்தோறும் சேர்க்கை/ வட்டம் மாவட்டம் தோறும் குழுக்கள் மூலமாக சேர்க்கை | • புதிய உறுப்பினர் சேர்க்கை அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது.<br>• கிராமங்கள் தோறும் உறுப்பினர் சேர்க்கை குழுக்கள் அமைக்கப் பெற்று 2 இலட்சம் நபர்களுக்கு மேல் உறுப்பினராக சேர்க்கப்பட்டு அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. |
| மருத்துவ முகாம்கள் | ஏதும் இல்லை | • ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின்படி அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் முகாம்கள் நடத்த வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | • இதுவரை 864 பெரும் முகாம்கள் மற்றும் 14,121 மருத்துவமனை முகாம்கள் நடந்துள்ளன. |
| அரசு மருத்துவமனை செயல்பாடுகள் | 1. அரசு மருத்துவமனைகளின் செயல்பாடுகள் மிக குறைவாக (3%) இருந்தன.<br>2. சிகிச்சைக்கான செலவினங்களின் 60 விழுக்காடு அரசுக்கு 40 விழுக்காடு மட்டுமே அரசு மருத்துவமனைகளுக்கும் அளிக்கப்பட்டது.<br>3. அரசு மருத்துவமனைகளுக்கு என சிகிச்சை முறைகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.<br>4. பயனாளிகளுக்கு என தனி வார்டு இல்லை | • அரசு மருத்துவமனைகளின் செயல்பாடுகள் தற்போது 40% அளவில் முன்னேறி உள்ளது.<br>• அரசு மருத்துவமனைகளுக்கு மொத்தமாக வழங்கப்படும் (45% சிகிச்சை கருவிகள், 20% மருத்துவமனை மேம்பாடு 15% அறுவை சிகிச்சை மருத்துவர்களின் ஊக்கத்தொகை மற்றும் 20% சிறப்பு நிதி)<br>• அரசு மருத்துவமனைகளுக்கு என சில சிகிச்சை முறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன<br>• காப்பீட்டுத் பயனாளிகள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொள்ள ஏதுவாக சிறப்பு வார்டுகள் கட்டண வார்டுகளுக்கு இணையாக உருவாக்கப்பட்டுள்ளன. |
| சிறப்பு அறுவை சிகிச்சைக்களுக்கு | ஏதுமில்லை | • சிறப்பு அறுவை சிகிச்சைகளான கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, காது, நுண் எலும்பு கருவி பொருத்தும் அறுவை சிகிச்சை, ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சை ஆகியன இதில் சேர்க்கப்பட்டுள்ளது.<br>• இந்த நிதிக்காக அரசு ரூ.10 கோடி வழங்கியுள்ளது.<br>• அரசு மருத்துவமனைகளில் பெறப்படும் சிகிச்சை செலவு தொகியின் 20 விழுக்காடு சிறப்பு நிதிக்கு காப்பீட்டு நிறுவனத்தால் நாள்தோறும் செலுத்தப்படுகிறது. |

# அனுமதிக்கப்பட்ட ஒப்புதல் விவரம்

| சிறப்பு சிகிச்சை | ஒப்புதல் எண்ணிக்கை | ஒப்புதல் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| இருதய நோய் | 16,040 | 4,107.89 |
| இருதய அறுவை சிகிச்சை | 42,863 | 35,061.55 |
| காது, மூக்கு, தொண்டை | 67,815 | 7,653.32 |
| இரைப்பை குடல் இயல் | 4,376 | 900.31 |
| பொது மருத்துவம் | 14,811 | 3,394.16 |
| பொது அறுவை சிகிச்சை | 43,467 | 9,637.80 |
| சிறுநீரக அறுவை சிகிச்சை | 51,511 | 11,597.76 |
| மகளிர் நோய் மருத்துவம் மற்றும் மகப்பேறு அறுவை சிகிச்சை | 38,141 | 7,057.49 |
| கல்லீரல் சிகிச்சை | 17,777 | 1,823.11 |
| புற்றுநோய் மருத்துவ சிகிச்சை | 1,09,401 | 6,578.53 |
| பச்சிளம் குழந்தைகள் சிகிச்சை | 34,401 | 7,601.28 |
| சிறுநீரக நோய் சிகிச்சை | 91,943 | 7,929.58 |
| நரம்பியல் சிகிச்சை | 15,457 | 2,880.19 |
| நரம்பியல் அறுவை சிகிச்சை | 21,606 | 8,537.32 |
| கண் அறுவை சிகிச்சை | 39,808 | 4,849.22 |
| எலும்பு முறி மருத்துவ சிகிச்சை | 29,080 | 5,815.55 |
| குழந்தைகள் தீவிர சிகிச்சை | 12,752 | 2,310.07 |
| குழந்தைகள் அறுவை சிகிச்சை | 3,830 | 1,125.52 |
| குழந்தைகள் மருத்துவம் | 2,737 | 404.31 |
| ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை | 15,256 | 4,014.31 |
| கதிர்வீச்சு புற்றுநோய் சிகிச்சை | 32,038 | 7,083.72 |
| மாற்று அறுவை சிகிச்சை | 15,807 | 10,762.65 |
| இரப்பை குடல் அறுவை சிகிச்சை | 3,884 | 1,500.59 |
| புற்றுநோய் அறுவை சிகிச்சை | 15,991 | 10,762.65 |
| உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை | 78 | 110.00 |
| இரத்தக்குழாய் அறுவை சிகிச்சை | 7,803 | 2,545.06 |
| நெஞ்சக அறுவை சிகிச்சை | 120 | 46.52 |
| தோல் கிகிச்சை | 980 | 160.27 |
| நாளமில்லா சுரப்பி சிகிச்சை | 174 | 46.54 |
| தொடர் சிகிச்சை | 1,242 | 25.22 |
| நெஞ்சக சிகிச்சை | 1,242 | 25.22 |
| முடங்கியல் சிகிச்சை | 3,259 | 642.80 |
| குறுக்கீடு கதிரியக்க சிகிச்சை | 2,370 | 1,157.97 |
| பல்வேறு காயங்களுக்கான சிகிச்சை | 2,166 | 505.64 |



# இந்திரதனுஷ் தடுப்பூசி திட்ட சிறப்பு முகாம்

குழந்தைகளுக்கு தடுப்பூசி போட தவறியோர், கர்ப்பிணிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம்.

தமிழகத்தில், இந்திர தனுஷ், திட்ட முதல் மாத சிறப்பு முகாம்களில், முறையாக தடுப்பூசி போட தவறிய, 12,058 குழந்தைகள் உட்பட, 14,274 பேர் பயன் பெற்றுள்ளனர். தடுப்பூசி போடுவதை இடை நிறுத்திய குழந்தைகளுக்கு, ஏழு விதமான நோய் தாக்குதல்களில் இருந்து காக்கும் வகையில், தடுப்பூசி போடும், இந்திர தனுஷ், திட்டத்தை, மத்திய அரசு அறிவித்தது.

தமிழகத்தில், எட்டு மாவட்டங்களில், இத்திட்டம், ஏப்ரல் 7–ம் தேதி துவக்கப்பட்டது. இதற்கான சிறப்பு முகாம்கள், 14–ம் தேதியுடன் முடிந்தன. விடுபட்ட சில இடங்களில், நடமாடும் முகாம்கள் நேற்று வரை நடந்தன.

இதன்படி, மொத்தம், 3,211 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில், முறையாக தடுப்பூசி போடாத, 2 வயதுக்கு உட்பட்ட, 12,058 குழந்தைகள் 2,216 கர்ப்பிணி பெண்களும் பயன் பெற்றுள்ளனர்.

இந்திர தனுஷ் திட்ட சிறப்பு முகாம், ஜூலை வரை நடக்கும். அடுத்த மாத முகாம், மே, 7 முதல் 13–ம் தேதி வரை நடக்கும். குழந்தைகளுக்கு தடுப்பூசி போட தவறியோர், கர்ப்பிணிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம்.

# Glimpses

















# வாய் நலமே உடல் நலம்

## வாய் சுகாதாரம்

ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி என்பது நாலடியார். இதுபோன்று இலக்கியங்களில் இருந்தும் வழக்கங்களில் இருந்தும் வாய் பல் மற்றும் அதன் ஆரோக்கியத்திற்கான அவசியத்தை தெரிந்து கொள்ளலாம்.

வாய் சுகாதாரம் என்பது வாய் மற்றும் பற்களை பற்சொத்தை ஈறு நோய் போன்றவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள மிகவும் அவசியம்.

## வாய் சுகாதாரம் மேற்கொள்ள மூன்று எளிய வழிகள்

### பல் துலக்குதல்



தினமும் இருமுறை அதாவது காலை மற்றும் இரவு படுக்கும் முன் கட்டாயம் பல் துலக்க வேண்டும் (வாயில் தோன்றும் பசை போன்ற அழுக்கு சரிவர சுத்தம் செய்யப்படாமல் விடும்போது கடினமான அழுக்காக மாறிவிடும். இதனை பல் துலக்குவதன் மூலம் சரி செய்ய முடியாது பல் மருத்துவர் மட்டுமே சரியான முறையில் சுத்தம் செய்ய முடியும்.

பல் துலக்க பயன்படுத்தும் பல் துலப்பானை 2 மாதங்களுக்கு ஒரு முறை மாற்றவும் அனைவருக்குமே மென் வகை பல் துலப்பான்கள் ஏற்றதாக இருக்கும்.

## பல்துலக்கும் முறை





ஒவ்வொரு முறை உணவு சாப்பிட்டபின் வாய் கொப்பளித்தல் வேண்டும். அது பல் இடுக்குகளில் இருக்கும் உணவு துகள்களை அகற்ற உதவும், மவுத்வாஷ் (Mouthwash) பயன்படுத்தியும் வாய் கொப்பளிக்கலாம்.



ஃப்லாஸ் (Floss) பயன்படுத்தி பற்களின் இடுக்குகளில் தங்கிவிடும் அழுக்குகளை சுத்தம் செய்து வெளியேற்றுவதால் ஈறுகள் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும்.



# வாய்புற்றுநோய் பற்றி அறிந்துகொள்வோம்

புற்றுநோய் என்பது உயிர் அணுக்களின் கட்டுப்பாடற்ற பெருக்கத்தால் ஏற்படும் நோய் ஆகும். புற்றுநோய் எந்த வயதினரையும் தாக்கும். இறப்பிற்கான முதன்மை காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

## எவ்வாறு கண்டறிவது

1. வாயின் உட்புறத்தில் அல்லது நாக்கில் வெள்ளை அல்லது சிவப்பு நிற திட்டுகள் தடிப்பாகவோ அல்லது ஆறாத புண்ணாகவோ தோன்றும். பிறகு படிப்படியாக வாயினுள் உள்ள மற்ற பாகங்களையும் தாக்கி உயிரைக் குடிக்கும்.



நாக்கில் வெண்படை



வாயினுள் வெண்படை



நாக்கில் நாள்பட்ட புண்



வாயினுள் நாள்பட்ட புண்

2. உணவு விழுங்குவதில் சிரமம் அல்லது வலி மற்றும் வாயினுள் வலியற்ற சதை வளர்ச்சி ஏற்படுதல்.
3. வலுவிழந்து ஆடும்பற்கள்
4. கழுத்தில் அல்லது தொண்டையில் கட்டி, வாயினுள் இரத்தக் கசிவு மற்றும் குரல் மாற்றம்.

## வாய்புற்று நோய்க்கான காரணிகள்

1. சிகரெட், சுருட்டு, பீடி மூலம் புகைக்கும் பழக்கம். பாக்கு மெல்லும் பழக்கம், மூக்குப்பொடி பயன்படுத்தும் பழக்கம்.
2. மது பழக்கம்.
3. உடைந்த கூரான பற்கள், ஆறாத புண்களை ஏற்படுத்தும்.

## வாய்புற்று நோயின் ஆரம்ப நிலை அறிகுறிகள்

- வாயின் உட்புறத்தில் அல்லது வெள்ளை அல்லது சிவப்பு நிறத்தில் ஏற்படும் படை.
- வாயின் உட்புறத்தில் அல்லது நாக்கில் ஏற்படும் ஆறாத புண்.

## பரிசோதனை

புற்றுநோய் எந்த பாலருக்கும் எந்த வயதினருக்கும் ஏற்படலாம். நோயை ஆரம்பநிலையில் கண்டறிவது அவசியம். இது பல் மருத்துவரால் எளிதான வலியற்ற பரிசோதனைகளால் கண்டறியப்படுகிறது. தேவைப்பட்டால் திசு பரிசோதனையும் செய்து கண்டறியப்படும்.

## சுய பரிசோதனை முறை

வாய் சுய பரிசோதனைமுறை மூலம் நோய் அறிகுறிகளை நாம் அறிய முடியும். அதற்கு சுத்தமான தண்ணீரில் வாயை கொப்பளித்து, முகம் பார்க்கும் கண்ணாடியின் முன் வாயை திறந்துகொண்டு, சிறிய வலியற்ற கட்டிகளோ, வெண் மற்றும் செந்நிற படையோ, புண்களோ, உள்ளதா என்றும், மற்றும் எளிதாக வாயை திறந்து மூட முடிகிறதா, நாக்கை நீட்டி மடக்க முடிகிறதா என்றும் பார்கக வேண்டும். இந்த சுயபரிசோதனையில் ஏதாவது மாற்றங்கள் தெரியவந்தால் உடனே பல் மருத்துவரை கலந்தாலோசிக்க வேண்டும்.

## வாய்புற்று நோய் வராமல் தடுக்க சில எளிய முறைகள்

- மது அருந்துதல், புகை பிடித்தல், பான்பராக், குட்கா போன்ற பொருட்களை மெல்லுதல் ஆகிய பழக்கங்களை தவிர்க்க வேண்டும்.
- வாய் சுகாதாரம் பேணல் வேண்டும்.
- இரத்த சோகை இருப்பின் பொதுமருத்துவரிடம் பரிசோதித்து அதை சரி செய்துகொள்ள வேண்டும்.
- ஆரோக்கியமான உணவுகள், புரதம் மிகுந்த பருப்பு வகைகள், காய்கறிகள் பழங்கள் உட்கொள்ளுதல் அவசியம்.



# தாய் சேய் நல கண்காணிப்பு மையம் தொடக்கம்

தாய் சேய் நல உதவி, கண்காணிப்பு மையம் சென்னையில் தொடங்கப்பட்டது.

சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள டி.எம்.எஸ். வளாகத்தில் சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் இந்த மையத்தைத் தொடங்கி வைத்தார்.

மாநில அளவிலான அனைத்து தாய் சேய் நலப்பணிகளுக்கான தகவல், உதவி மையமாக இது திகழும். இந்த மையம் முதல் கட்டமாக திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 10 மணி முதல் மாலை 5.30 மணி வரை செயல்படும்.

அதே போன்று கிராம சுகாதாரச் செவிலியர்கள் களப்பணியாற்றி, கர்ப்பிணிகளுக்கு பிரசவத்துக்கு முன்னும், பின்னும் அளிக்க வேண்டிய கவனிப்பு குறித்த ஆலோசனைகளை வழங்குவார்கள்.

## சேவைகள்

இந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள், செவிலியர்கள் மூலமாக தாய், குழந்தைகளுக்குத் தேவையான பயனுள்ள தகவல்கள் தொலை பேசி வாயிலாக வழங்கப்படும்.

மாநில அளவிலான அனைத்து தாய் சேய் நலப்பணிகளுக்கான தகவல், உதவி மையமாக இது திகழும்.

கர்ப்ப கால கவனிப்பு தொடர்பான தகவல்கள், ஆலோசனைகள் தாய் சேய் நல சேவைகள் நிர்ணயிக்கப்பட்ட தேதியை தாய்க்கு நினைவூட்டுதல் அதிக சிக்கல் உள்ள கர்ப்பிணிகளுக்கு வழிகாட்டுதல்களை வழங்குதல், தாய்மார்களுக்கு சுகாதார விழிப்புணர்வுக் கல்வி வழங்குதல், தாய் சேய் நல சேவை குறைபாடுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்தல் ஆகிய சேவைகள் இதன் மூலம் வழங்கப்படும்.

இது தவிர தமிழக அரசின் 108 ஆம்புலன்ஸ் சேவை, 104 தொலைபேசி சேவை ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்தும் இந்த மையம் செயல்படும்.

அடுத்த கட்டமாக இந்த மையம் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் விரிவுபடுத்தப்படவுள்ளது.

# Success Stories



| | | |
|---|---|---|
| **Name** | : | **Hasini** |
| **District** | : | **Coimbatore** |
| **Age** | : | **3 Yrs/F** |
| **Procedure** | : | **Cochlear Implant Surgery for Children Below 6 Years** |
| **Approved Amount** | : | **Rs.7,90,000/-** |

3 years old female child Hasini D/o Sathish Kumar residing at Nayakanur had both ear deafness and difficulty in speech since birth.

As patient's parents were of poor economic status they were helpless and approached nearby private hospital- Vikram ENT hospital and Institute and came to know about Chief Minister's Comprehensive Health Insurance Scheme and got admitted on 11.12.2013. Planned for cochlear implant surgery on 10.01.2014 after which she was able to develop her hearing and speech.

Hence they are very thankful to Chief Minister's Comprehensive Health Insurance Scheme.



**Name** : **Rahini.M**
**Age** : **5yrs/F**
**District** : **Thanjavur**
**Procedure** : **Cochlear implant surgery for Children Below 6 years**
**Approved amount** : **Rs.7,90,000/-**

Baby Rohini aged 5 years female suffering from both ears deafness since birth D/o. Manikkam residing at Thirunallur , Thanjanur District.

Her father is a cooly and mother physically handicapped, took their child to the medical camp conducted at Kumbakonam and were informed about Chief Minister's Comprehensive Health Insurance Scheme and was referred to Madras ENT Research Foundation, Chennai, got admitted on 03.04.2014 planned for cochlear implant surgery on 04.04.14.

After surgery she improved hearing and speech well. Child's parents extended their heartful thanks to the scheme which helped their child to develop normal speech.




**Name** : **Guhan.E**
**Age** : **2yrs/mch**
**District** : **Thanjavur**
**Procedures** : **Auditory Brain Stem Implantation**
**Approved Amount** : **Rs.18,24,120/-**

Guhan.E aged 2 years male child S/o. Ilayaraja residing at Mel Ulur Thanjavur district suffering from deafness since birth.

They approached Madras ENT Research Foundation for treatment on 09.11.2014 and diagnosed as Bilateral Michel deformity [Absent Cochlea] Parents were informed about the Chief Minister's Comprehensive Health Insurance Scheme Auditory brain stem implantation Surgery was done on 11.11.2014 after which child improving hearing and speech.

Patient's parents are thankful for such a wonderful scheme.



Name : B/o Jagadeesan Priyanka
Age : 1day old male child
District : Cuddalore
Procedures : Preterm baby/ clinical sepsis/
Hyperbilirubinemia (non-ventilated)
Approved Amount : Rs.45,000/-

1 day old male child, B/O Jagadeesan residing at Thazhanguda, father is cooly, was Preterm baby admitted in Government Head Quarters Hospital, Cuddalore under Chief Minister's Comprehensive Health Insurance Scheme.

Patient's mother acknowledged that her baby was very sick and after treatment now the baby is recovering well, she extends her heartfelt thanks to the scheme.



Name : Afroze Ahemed
Age : 46yrs/M
District : Chennai
Procedures : TN-0796 : Renal Transplantation Surgery
Approved Amount : Rs.4,00,000/-

Afroze Ahemed, 46 years old male residing in Triplicane, Chennai was suffering from Renal Disease, patient approached Billroth Hospital, Ramapuram with his smart card himself, and got admitted on 24.08.2014 was planned for Renal Transplant surgery on 25.08.2014.

After surgery patient acknowledges that he is recovering from the disease and extends his thanks to the scheme.



| | | |
|---|---|---|
| **Name** | : | **Gowthami** |
| **District** | : | **Krishnagiri** |
| **Age** | : | **9yrs/F** |
| **Procedure** | : | **Intra Cardiac Repair of Asd** |
| **Approved amount** | : | **Rs 82,500/-** |

Gowthami 9/yrs old female child D/o. Vengaiyyan, residing at Avathuvadi with Poor Economic Status, was suffering from chest pain, giddiness admitted in Private hospital She was referred to Narayana Hrudhayalaya Hospital.

In that hospital patient was diagnosed with Atrial septal defect and was informed about the Chief minister's Comprehensive Health Insurance Scheme Patient's parents acknowledged that all investigations, surgery was done on 08.09.2014 at free of cost and their daughter recovering well.

They extended their thanks to the Chief Minister's Comprehensive Health Insurance Scheme and Tamilnadu government.



| | | |
|---|---|---|
| **Name** | : | **Kamala** |
| **Age** | : | **59yrs/f** |
| **District** | : | **Salem** |
| **Procedure** | : | **Mitral Valve Replacement** |
| **Approved amount** | : | **Rs. 1, 25,000/-** |

59 years old female Mrs.Kamala w/o. was suffering from breathlessness and cold peripheries for past 5 years was diagnosed as Mitral Valve Stenosis in Kurinji Hospital, Salem and got admitted and planned for Mitral valve replacement on 09.10.2014.

They were already having Chief Minister's Comprehensive Health Insurance Scheme card with them, so they requested for the cashless treatment, it was an empanelled hospital so all investigations, surgery and bed charges were provided free of cost . After surgery she acknowledges that she is able to do her house hold work normally. She feels thankful for the Chief Minister's Comprehensive Health Insurance Scheme and Tamil Nadu Govt.

# செய்தித்தாள்கள் பார்வையில்...



மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்று (21.04.2015) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில், மக்கள் நல்வாழ்வுத் துறை உயர் அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., சிறப்பு செயலாளர் டாக்டர் பி.செந்தில்குமார், இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திரு.மோகன் பியாரே, இ.ஆ.ப., மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஜெயலலிதா கொண்டு வந்த

## முதல்-அமைச்சரின் மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் 10 லட்சம் பேருக்கு சிகிச்சை

### தமிழக அரசு அறிக்கை

[illegible]

## குன்னூர் ஆய்வகத்தில் போலியோ தடுப்பு மருந்து தயாரிக்க திட்டம்

நீலகிரி, ஏப்.11-

நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள பாஸ்டியர் ஆய்வகத்தில் போலியோ தடுப்பூசி மருந்து உற்பத்தி செய்வதற்கான திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் குன்னூர் பாஸ்டியர் ஆய்வகத்தில், கக்குவான், தொண்டையடைப்பான் போன்ற முக்கிய தடுப்பு மருந்துகளும், வெறிநாய்க்கடி தடுப்பு மருந்தும் உற்பத்தி செய்யப்படுகின்றன. தற்போது உலக சுகாதார மையத்தின் பரிந்துரைப்படி, 118 கோடி ரூபாயில் இங்கு [illegible] போலியோ சொட்டு மருந்துக்குப் [illegible] மருந்து தயாரிப்பதற்கான ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்த ஆய்வகத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்காக [illegible] நாட்டு நிபுணர்களும், உலக சுகாதார மைய அதிகாரிகளும் ஏற்கெனவே பாஸ்டியர் ஆய்வகத்தை பார்வையிட்டுச் சென்றிருப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

கடந்த 1960ம் ஆண்டில், இந்தியாவிலேயே குன்னூர் பாஸ்டியர் ஆய்வகத்தில்தான் முதல் முறையாக போலியோ சொட்டு மருந்து தயாரிக்கப்பட்டது. 1972ம் ஆண்டுக்குப் பிறகு அந்த தொழில்நுட்பம் மும்பை ஆய்வகத்திற்கு மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மருத்துவத் துறை பணியாளர்களை தேர்வு செய்ய

## இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டுமே மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் அமைப்பு

பேரவையில் அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் பெருமிதம்

## நல்ல செய்தி!

- நாட்டில் உள்ள நோயாளிகளின் நோய் விவரங்கள் தொகுப்பு
- எந்த நேரத்திலும் தகவல்களை பெற விரிவான ஏற்பாடு







## Helpline For Mother, Child Care Launched

Express News Service

**Chennai:** In an initiative to reduce the maternal and infant mortality in the State, Health Minister C Vijay Baskar on Tuesday launched 'Mother and Child Care' helpline at the Directorate of Medical and Rural Health Services (DMS) campus.

The Minister said the State government has been a frontrunner in providing neonatal care. Infant death rates have been coming down in Tamil Nadu with the Comprehensive Emergency Obstetric and Neonatal Care Centres, New Born Stabilisation Unit and Neonatal Intensive Care Units functioning effectively.

The new helpline launched will have counsellors at the centre keeping track of pregnant women across the State and providing guidance during pregnancy-time and during child care. The village health nurses in the districts will collect data of pregnant women who come in for check up to government hospitals and will call them later to follow up. The facility will function from 9 am to 5.30pm on all working days including Saturday. It will be converted into a 24-hour facility and be integrated with the existing 104 and 108 services.

The Minister added that for the first time in India, 37 neonatal ambulances have been introduced in Chennai with facilities such as incubators, volume infusion pumps, ventilators, oxygen cylinders, pulse oxymeters, multi-parameters. Additionally, in Egmore Hospital, a 90-day training course is being provided to pregnant women and mothers of infants. Nurses who have undergone training in emergency care have also been appointed. Under this scheme, 23,760 infants have been saved proving that Tamil Nadu is a frontrunner in this scheme.






மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி கரூர், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல் ஆகிய 6 மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன், கரூரில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில்பாலாஜி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் ஆகியோர் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர், திரு. [illegible] இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. [illegible] இ.ஆ.ப., பேரூராட்சி இயக்குநர் திரு. [illegible] இ.ஆ.ப. மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா வழிகாட்டுதலின்படி

**...சநோய் - மஞ்சள் காமாலை உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கு இந்திர தனுஷ் தடுப்பூசி மருந்து சிறப்பு முகாம்**

முதக்கட்டமாக 8 மாவட்டங்களில் அமைச்சர்கள் துவக்கி வைத்தனர்





## மருத்துவத்துறையில் அம்மாவின் அரசு ...
## சாதனைகளைச் செய்து நாட்டிலேயே முதலிடம்

## இந்தியாவிலேயே தமிழகத்தில் மட்டுமே மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் அமைப்பு

### குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை

# மேடவாக்கம் துணை சுகாதார நிலையம் முதலிடம்

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சைதாப்பேட்டை மற்றும் காஞ்சிபுரம் என்று 2 சுகாதார மாவட்டங்கள் உள்ளன. இவற்றின் கீழ் 1,750 துணை சுகாதார நிலையங்கள் உள்ளன.

சைதாப்பேட்டை சுகாதார மாவட்டத்தின் கீழ் செயல்படும் மேடவாக்கம் துணை சுகாதார நிலையத்தில், 2013-14-ஆம் ஆண்டில் தமிழகத்திலேயே அதிக பட்சமாக 1,065 பெண்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்த மேடவாக்கம் துணை சுகாதார நிலையத்தைப் பாராட்டி தமிழக அரசு சான்று வழங்கியுள்ளது.

இதுகுறித்து சைதாப்பேட்டை சுகாதாரத் துறை துணை இயக்குநர் ராஜசேகர் கூறியதாவது: 2013-14ம் ஆண்டில், காஞ்சிபுரம் மற்றும் சைதாப்பேட்டை சுகாதார மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் 15,593 பெண்களுக்கும், துணை சுகாதார நிலையங்களில் சைதாப்பேட்டை சுகாதார மாவட்டத்தில் 2,937, காஞ்சிபுரம் சுகாதார மாவட்டத்தில் 2,487 என மொத்தம் 5,424 பெண்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பாக, சைதாப்பேட்டை சுகாதார மாவட்டத்தின் கீழ் உள்ள மேடவாக்கம் துணை சுகாதார நிலையத்தில் மட்டும் 1,065 பெண்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் பெண் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை அளித்ததற்காக தமிழக அரசு பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கியுள்ளது.

872 பெண்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை அளித்த நந்திவரம் துணை சுகாதார நிலையம் மாநில அளவில் இரண்டாம் இடம் பிடித்துள்ளது என்றார் அவர்.


## விபத்தில் சிக்கி உயிருக்கு போராடிய ஐ.டி. ஊழியரை மீட்ட அமைச்சர்கள்





# Health Helpline

'104' Health helpline cum Telemedicine service – a 24x7 facility, was inauguarated on 30.12.2013. It is aimed at providing free access to health information, health guidance and grievance redressal facility.




## 9,38,950 calls

have been received in '104' health helpline from public across the state as on 31st March 2015.

# Tap 104 for a quick consultation




**It is easy to access Medical advice and information about doctors and hospitals with this helpline,**

This facility operates like any other call centre in the city except that there is no commerce attached to these calls.

These callers are accessing the 104 helpline, an initiative of Tamil Nadu Health System Project, which was started by the State Government on December 30.2013.

The Centre, which is run by the GVK Emergency Management and Research Institute (EMRI) with the support of the State Government, functions at the Government Kasturba Gandhi Hospital for Women and Children at Triplicane.

The helpline facility is operated round the clock with a team of doctors deployed exclusively for answering queries.

The 104 helpline call centre consists of a registration officer, a health advise officer, a medical officer, a counseling officer and a service improvement officer. All the calls are attended either by doctors, staff nurses or qualified counselors. There are staff who can take calls in Tamil, English, Hindi, Malayalam, Kannada and Telugu.

The State Government started the inititative with the main objective of offering quick remedies for minor aliments such as a head ache, fever, vomiting and minor injuries. If there is a need for immediate and greater intervention, then the call is likely to b diverted to the 108 Emergency Response services.

Callers also seek information on a variety of matters including nutrition, obesity facilities at Government hospitals, facilities available under the Chief Minister health in surance scheme. Blood banks eye and organ donation. Maternal and child welfare centres and mental health counseling.

Even students are using the help line facility to overcome academic related stress family problems, memory disorders and suicidal thoughts during the time of examinations or results.

As per the nature of a calls, it would be transferred to a doctor or a nurse or a counselor. Though there are several calls regarding prescription of drugs the centre does not prescribe drugs, instead it refers them to the nearest Government hospital.

# மணத்தக்காளி



## தாவர விளக்கம்

மணத்தக்காளி என்பது 1,5 மீ வரை உயரமான, அதிகக் கிளைகள் கொண்ட தாவரம், இலைகள், அகன்ற முட்டை அல்லது நீள்வட்ட வடிவமானவை. ஒரு தொகுப்பில் 7 மலர்கள், சிறியவை, வெண்மை நிறமானவை காய், பச்சை நிறம். பழம், கோள வடிவமானது. கருநீலம் அல்லது ஆரஞ்சு, சிவப்பு நிறமானவை.

தமிழகமெங்கும், சமவெளிகள், கடற்கரையோரங்கள், முக்கியமாக ஆற்றங்கரைகளில் பரவலாக விளைகின்றன. மேலும், இதன் இலைகள், பழங்களின் முக்கியத்துவம் கருதி வீடுகளிலும் வளர்க்கப்படுகின்றன.

மணத்தக்காளி, மஞ்சளி, மிளகுத் தக்காளி, வாயசம் ஆகிய மாற்றுப் பெயர்களும் இதற்கு உண்டு. காயை உலரவைத்து, பதப்படுத்தி தயாரிக்கப்பட்ட மணத்தக்காளி வற்றல் மளிகை மற்றும் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். இலை, காய் பழங்கள் ஆகியவை மருத்துவத்தில் உபயோகமாகின்றன.

## மருத்துவப் பயன்கள் மற்றும் மருந்து முறைகள்

இலை, காய் ஆகியவை இந்திய மருத்துவத்தில் முக்கியமானதாகும். இவை இனிப்புச் சுவையும் குளிர்ச்சித் தன்மையும் கொண்டது வைட்டமின் பி சத்து மிகுந்தது, வயிற்றுப்போக்கையும், வயிற்றுப்புண் மற்றும் வயிறு சம்பந்தமான பிற நோய்களையும் குணப்படுத்தும், சிறுநீர் மற்றும் வியர்வையைப் பெருக்கும், தோல் நோய்களைக் கட்டுப்படுத்தும், பழம் வயிற்று போக்குக்கு மருந்தாகும், உடலைப் பலப்படுத்தும், காசநோய் தோல் நோய்கள் தாகத்தைக் குறைக்கும், சிறுநீரை வெளியேற்றும்.

## வாய்ப்புண் குணமாக

மணத்தக்காளியின் பசுமையான இலைகளை, தேவையான அளவு நெய்யுடன் சேர்த்து, வதக்கி, துவையல் செய்து சாதத்துடன் சேர்த்து சாப்பிட்டு வர வேண்டும். பசுமையான 5 இலைகளை மென்று சாற்றை விழுங்கலாம். இதுபோல ஒரு நாளைக்கு 6 முறைகள் செய்தால் முழுமையான குணம் ஏற்படும்

## உடல் சூடு குணமாக

இலைச்சாறு 5 தேக்கரண்டி அளவு, தினமும் மூன்று வேளைகள் குடித்துவர வேண்டும்.

## நாக்குப்புண், குடல் புண் குணமாக

மணத்தக்காளி இலையை ஏதாவது ஒரு வகையில், உணவில் சேர்த்துக்கொண்டு வர வேண்டும். இந்தக் காலத்தில் காரம் அதிகமில்லாத உணவாகச் சாப்பிட வேண்டும்.

நாக்குச் சுவையின்மையை நீக்கும் தன்மையும், வாந்தியுணர்வைக் கட்டுப்படுத்தும் தன்மையும் மணத்தக்காளி வற்றலுக்கு உண்டு. ஆதலால் கர்ப்பிணிகள் குறைந்த அளவில், தினமும் வற்றலை உணவில் சேர்த்துக்கொண்டு வரலாம். மார்புச்சளி இளகி, வெளிப்படவும் மலச்சிக்கல் குறையவும் மணத்தக்காளி வற்றலை உபயோகிக்கலாம்.



# இலவச மருத்துவ முகாம்கள்

**தமிழக சுகாதாரத்துறை சார்பில் 2 மாதங்களில் 1749 இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இதன் மூலம் 5.25 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.**

தமிழக சுகாதாரத் துறை, பொது சுகாதார துறை சார்பில் கடந்த பிப்ரவரி, மார்ச் மாதங்களில் பல்வேறு இடங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

அதில் பொது சுகாதாரத்துறை சார்பில் நடத்தப்பட்ட 845 சிறப்பு முகாமில் 1,91,985 கர்ப்பிணிகள், பெண்கள், குழந்தைகள் பங்கேற்றனர். பெண்களுக்கான கர்ப்பப்பை புற்றுநோய் மற்றும் மார்பக புற்றுநோயை கண்டறியும் சிறப்பு முகாமில் 5358 பெண்கள் கலந்து கொண்டு பரிசோதனை மற்றும் சிகிச்சை பெற்றனர்.

மருத்துவ கல்வித்துறையின் மூலம் அனைத்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளின் சார்பில் நடத்தப்பட்ட சிறப்பு முகாமில் 35,868 பேர் பங்கேற்றனர்.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை சார்பில் மாவட்ட தலைமை மருத்துவமனை, வட்டார மருத்துவமனை ஆகியவை மூலம் 110 சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இதில் 72,581 பேர் கலந்து கொண்டு உயர் சிகிச்சை பெற்றனர். தமிழகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட 670 தனியார்



மருத்துவமனை சார்பில் நடத்தப்பட்ட சிறப்பு மருத்துவ முகாமில் 1,75,051 பேர் பங்கேற்றனர்.

இதில் உயர் சிகிச்சை தேவைப்பட்டவர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் மூலம் இலவசமாக சிகிச்சைகள் வழங்கப்பட்டன. தலைமைச் செயலகத்தில் 10 நாள் நடந்த சிறப்பு முகாமில் 15,180 அரசு அலுவலர், பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டனர்.

மொத்தம் 2 மாதங்களில் நடத்தப்பட்ட 1749 சிறப்பு மருத்துவ முகாமில் 5 லட்சத்து 25 ஆயிரத்து 16 பேர் கலந்து கொண்டனர். கடந்த ஆண்டு 1320 சிறப்பு முகாம் மூலம் 4,44,072 பேர் பயனடைந்தனர்.

கர்ப்பிணி தாய்மார்களுக்கான மருத்துவ முகாமில் 1,02,030 பெண்கள் பயனடைந்தனர். இந்த ஆண்டு கூடுதலாக 429 முகாம் நடத்தப்பட்டு 81,255 பேர் மருத்துவ வசதிகளும், சிகிச்சையும் பெற்றுள்ளனர். இந்த் ஆண்டு 89965 பெண்கள் கூடுதலாக பயன் பெற்றுள்ளனர்.

மேலும், தாய்மார்கள் பேறு காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை, பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு, தொற்று நோய், தொற்றா நோய்கள் குறித்து விழிப்புணர்வு கையேடுகள், வீடியோ, குறும்படங்கள் மூலமும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



# பாதுகாப்பற்ற உணவுகளை தவிர்ப்போம்!

கடந்த 1948ஆம் ஆண்டு ஏப்ரல் 7ம் தேதி உலக சுகாதார மையம் தொடங்கப்பட்டதை தொடர்ந்து, ஒவ்வொரு ஆண்டும் அந்த நாளை உலக சுகாதார தினமாக உலக சுகாதார நிறுவனம் கடைப்பிடித்து வருகிறது.

மனிதனின் ஆரோக்கிய வாழ்வுக்கு சத்துள்ள, பாதுகாப்பான உணவு அவசியம். ஆனால், இன்று விளைச்சலை அதிகரிக்க பயன்படுத்தப்படும் ரசாயனம், பூச்சிக்கொல்லி மருந்துகளால் காய்கறிகளும், உணவுப் பொருட்களும் விஷமாகி மனிதர்களுக்கு பல்வேறு நோய்களை உருவாக்கி வருகின்றன.

## பதப்படுத்தப்பட்ட உணவுகள்

முன்பெல்லாம், தொலைதூரப் பயணம் செல்லும்போது மட்டுமே ஹோட்டல் உணவை சாப்பிட்டனர். பொட்டலம் கட்டிசாப்பாடுகளை எடுத்துச் சென்றனர். இன்று சட்னி, சாம்பார் தொடங்கி சாதம், இறைச்சி வரை பிளாஸ்டிக் டப்பா, பாலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வந்து விட்டது. மைக்ரோ ஓவன்களில் சூடுபடுத்தி எப்போது வேண்டுமானாலும் சாப்பிடலாம் என்கின்றனர்.

இந்த பதப்படுத்தப்பட்ட உணவுகள் கெடாமல் இருக்க அதிக அளவு உப்பு, வேதிப் பொருட்களை சேர்க்கின்றனர். இந்த உணவுகளை தொடர்ந்து

சாப்பிடுவதால் இரைப்பை புற்றுநோய், பெருங்குடல் புற்றுநோய், நீரிழிவு நோய் பாதிப்பு ஏற்படுகிறது.

பர்கர், பிரைடு ரைஸ், புரோட்டோ உள்ளிட்ட பாஸ்ட்புட், நடைபாதை உணவுகளை தவிர்க்க வேண்டும். பொதுவாக இரவில் புரோட்டா சாப்பிடுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். மைதா மாவில் தயாரான புரோட்டா, குருமாவை சாப்பிட்டால் இதய நோய்களை ஏற்படுத்தும்.

## உணவே மருந்து

அந்தக் காலத்தில் பாசிப்பருப்பு, கடலைப் பருப்பு உள்ளிட்ட சத்துள்ள தானியங்களை அரைத்து மாவாக்கி இனிப்பு கலந்து குழந்தைகளுக்கு வழங்கினர். அதனால், குழந்தைகளின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்தது.

இப்போது எல்லா கடைகளிலும் சுலபமாக கிடைக்கும் பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட மாவுப் பொருட்கள், சிப்ஸ் போன்றவற்றை வாங்கி கொடுக்கின்றனர்.

டி.வி.யில் வரக்கூடிய விளம்பரங்களில் டின், பாக்கெட், பாஸ்ட் புட் உணவுகளை பார்த்து குழந்தைகள் கேட்பார்கள். அவற்றை வாங்கிக் கொடுக்கக் கூடாது. பாதுகாப்பற்ற உணவே 40 சதவிதம் நோய் ஏற்படக் காரணம்.

இதை இன்று உணராவிட்டால், பின்னாளில் ஆரோக்கியம் கெட்டு மருத்துவமனைகளில் லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்க வேண்டிய நிலை வரும்.

அதனாலேயே, இந்த ஆண்டு உலக மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க 'தோட்டம் முதல் தட்டு வரை உணவை பாதுகாப்போம்' என்ற கோஷத்தைக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்த உலக சுகாதார நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

உணவை மருந்தாக்கும் வல்லமை உங்கள் கையில்தான் உள்ளது. வீட்டிலேயே பாதுகாப்பான முறையில் எளிமையான, சத்தான உணவுகளை தயாரிக்க பழகிக் கொள்ள வேண்டும்.

பாதுகாப்பற்ற, பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களில் இருக்கும் பாக்டீரியா, வைரஸ் நுண் கிருமிகள், வேதிப்பொருட்கள் மனிதனுக்கு 200 வகையான நோய்களை ஏற்படுத்துகின்றன. அதில் மிக முக்கியமானது, இன்று மனித உலகை அச்சுறுத்திவரும் புற்றுநோய்.

# குரல் மாற்றும் அறுவை சிகிச்சை



*பெண் குரலை ஆண் குரலாக மாற்றும் இந்த அறுவை சிகிச்சை (PUBERPHONIA) இந்தியாவிலேயே முதன் முறையாக அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது.*

சுமார் ஒரு வருடத்திற்கு முன் ஸ்டான்லி மருத்துவமனை காது மூக்கு தொண்டை வெளி நோயாளி பிரிவிற்கு 24 வயது நிரம்பிய வாலிபர் வந்தார். அவரது வேண்டுகோள் அனைவரையும் அச்சப்பட வைத்தது. அவர் தனது குரல்வளையில் அறுவைசிகிச்சை செய்து ஊமை ஆக்கிவிடும்படி மருத்துவரை வேண்டினார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு அந்த வயதில் ஏற்பட வேண்டிய ஆண் குரல் மாற்றம் ஏற்படாமல் பெண் குரல் தங்கிவிட்டது. இது சுமார் ஒரு சதவிகிதம் ஆண்களிடம் ஏற்படும் கோளாறாகும். பெரும்பாலான இந்த நோயாளிகள் பேச்சு பயிற்சி சிகிச்சை மூலம் குணம் அடைவர்.

இந்த நோயாளியோ பல மருத்துவர்களையும், மருத்துவமனைகளையும் நாடியும் பலன் ஏற்படவில்லை நண்பர்களின் ஏச்சுக்கும் கிண்டல்களுக்கும் ஆளானதின் பயனால் விரக்தியின் உச்சத்திற்கு சென்றுவிட்டார். இரு முறை தனது உயிரை மாய்த்துக்கொள்ளவும் முயன்று தோற்றார்.

இந்த தருணத்தில் அவரது பெற்றோர் அவரது மாமன் மகளை அவருக்கு மணமுடிக்க ஏற்பாடு செய்தனர். பெண்பார்க்க சென்ற போது அவரது மாமன் மகளோ, அவரை பார்த்து நீ அழகாக இருந்தாலும் நான் எப்படி ஒரு பெண்ணை திருமணம் செய்ய இயலும் என்று கூறவே மனமுடைந்து போனார். பல இரவுகள் தூக்கமின்றி கழித்தார்.

அவருக்கு உதவும் வகையில் அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மரு தி. பாலசுப்ரமணியன் தலைமையில் மரு. சீதாலஷ்மி மற்றும் மரு. சுந்திரமௌலி கூடிய மருத்துவக்குழு குரல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொண்டது. இந்த அறுவை சிகிச்சை PUBERPHONIA (பெண் குரலை ஆண் குரலாக மாற்றும் அறுவை சிகிச்சை) இந்தியாவிலேயே முதன்முறையாக இங்கு மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. அறுவை அரங்கத்திலேயே அவர் குரல் மாறியது. அனைவருக்கும் ஆனந்தம்.

மூன்று மாதங்கள் கடந்தது. ஒரு நாள் அந்த வாலிபர் மீண்டும் காது மூக்கு தொண்டை பிரிவிற்கு வந்தார். அவர் வந்தது தனது மாமன் மகளுடன் நிகழும் திருமணத்திற்கு அழைக்கவே.

அவர் தனது திருமணத்தை மருத்துவமனை வளாகத்தில் உள்ள விநாயகர் கோவிலில் வைத்து நடத்தினார். அவரின் இந்த செயல் அனைவரையும் மனம் நெகிழச்செய்தது.


*Published By : Health and Family Welfare Department, Government of Tamil Nadu.*
*Printed by : Punnagai, Brindavan House, #258, Ammayi Ammal Street, Amainthokarai, Chennai - 29.*

எந்த அவசர உதவியானாலும்

CALL 108

EMERGENCY

• MEDICAL • POLICE • FIRE

24 மணி நேரமும்

இலவச அவசர உதவி சேவை.

GVK EMRI



அம்மா
மருத்துவ காப்பீட்டு
வார்டு



மாண்புமிகு தமிழக முதலமைச்சரின்
விரிவான மருத்துவ
காப்பீட்டுத் திட்டம்
24 மணி நேர கட்டணமில்லா
தொலைபேசி உதவி
1800425 3993

தமிழ்நாடு அரசு
இலவச மருத்துவ உதவிக்கு

104

மருத்துவ உதவி

தகவல் • ஆலோசனை • புகார்

24 மணி நேரமும்
இலவச மருத்துவ
தகவல் மற்றும் ஆலோசனை

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு

DPH

24 மணி நேர கட்டுப்பாட்டு மையம்
24 x 7 Control Room

உங்கள் பகுதியில் காய்ச்சல்,
வயிற்றுப்போக்கு மற்றும்
மஞ்சள் காமாலை பாதிப்பு
ஏற்பட்டால் உடனடியாக
பொது சுகாதாரத் துறையின்
24 x 7 மணி நேர கட்டுப்பாட்டு
மையத்தை கீழ்கண்ட
தொலைபேசி எண்கள்
மூலம் தொடர்பு கொண்டோ
குறுஞ்செய்தியாகவோ
தெரியப்படுத்துங்கள்.

தொலைபேசி : 044-24350496 / 044-24334811
கைபேசி : 9444340496 / 9361482899

# முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தைப் பற்றி தெரியவேண்டுமா

1.காப்பீட்டு திட்டத்தில் பயனாளி ஆக வேண்டுமா?

2.காப்பீட்டு திட்டத்திற்கு பயனாளியாக தகுதிகள் தெரிய வேண்டுமா?

3.காப்பீட்டு திட்டத்திற்கு அனுமதி பெற என்னென்ன சான்றிதழ்கள் வேண்டும் என்று தெரிய வேண்டுமா?

4.காப்பீட்டு திட்டத்தில் என்னென்ன மருத்துவமனைகள் இருக்கிறது என்று தெரியவேண்டுமா?

5.காப்பீட்டு திட்டத்தில் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டுமா?

6.காப்பீட்டு திட்டத்தில் மாற்று திறனாளிகள் சலுகைகளைப் பற்றி தெரியவேண்டுமா?

7.ஸ்மார்ட் கார்ட் இல்லையா?

8.ஸ்மார்ட் கார்ட் தொலைந்துவிட்டது. நகல் பெற வேண்டுமா?

9.காப்பீட்டு திட்ட மருத்துவமனைகளின் மீது புகார் தெரிவிக்க வேண்டுமா?

10.மருத்துவமனையில் காப்பீட்டு திட்டத்தில் அவசர அனுமதி பெற வேண்டுமா?

விபரங்கள் அறிய 24 மணி நேரமும் இயங்கும்

## கட்டணமில்லாத தொலைபேசி எண்

# 1800 425 3993

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை**

**தமிழ்நாடு அரசு**